# யோவான் எழுதிய மூன்றாம் கடிதம்

மூப்பனாகிய நான்,
உண்மையினால் நான் நேசிக்கும் எனது அன்பான
நண்பன் காயுவுக்கு எழுதுவது,
**2**எனது அன்பான நண்பனே, உனது ஆன்மா நல
மாயிருக்கும் வண்ணம் ஒவ்வொரு வகையிலும் நீ
நலமாயிருக்க வேண்டுமென நான் பிரார்த்திக்கிறேன்.
**3**உனது வாழ்க்கையில் உள்ள உண்மையைக் குறித்துச்
சில சகோதரர்கள் என்னிடம் வந்து கூறினர். உண்மை
யின் வழியை நீ தொடர்ந்து பின்பற்றுவதை அவர்கள்
எனக்குக் கூறினர். இது எனக்கு சந்தோஷம் கொடுத்
தது. **4**உண்மையின் வழியை எனது பிள்ளைகள்
பின்பற்றுகிறார்கள் என்பதைக் கேட்கும்போது எனக்கு
அளவு கடந்த சந்தோஷம் உண்டாகிறது.
**5**எனது அன்பான நண்பனே, கிறிஸ்துவில் சகோத
ரருக்கு உதவுவதில் நீ தொடர்ந்து ஈடுபடுவது நல்லது.
உனக்குத் தெரியாத சகோதரருக்கும் நீ உதவிக்
கொண்டிருக்கிறாய்! **6**இச் சகோதரர்கள் உனது அன்
பைக் குறித்து சபைக்கு கூறினர். அவர்கள் பயணத்
தைத் தொடருவதற்குத் தயவு செய்து நீ உதவு,
தேவனை மகிழ்ச்சிப்படுத்தும் வழியில் அவர்களுக்கு
உதவு. **7**கிறிஸ்துவின் சேவைக்காக இச்சகோதரர்கள்
பயணம் மேற்கொண்டனர். தேவனில் விசுவாசமற்
றோரிடமிருந்து அவர்கள் எந்தவித உதவியையும்
ஏற்கவில்லை. **8**எனவே இச்சகோதரருக்கு நாம் உதவ
வேண்டும். நாம் அவர்களுக்கு உதவும்போது,
உண்மைக்கான அவர்கள் வேலையில் நாமும் பங்கு
கொள்வோம். **9**நான் சபைக்கு ஒரு நிருபம் எழுதி
னேன். ஆனால் நாங்கள் சொல்வதைத் தியோத்
திரேப்பு கேட்கவில்லை. எப்போதும் அவர்களுக்குத்
தலைவனாக இருப்பதற்கு அவன் விரும்புகிறான்.
**10**தியோத்திரேப்பு செய்வது தவறு என்பதை நான்
வரும்போது பேசுவேன். அவன் எங்களைக் குறித்
துப் பொய் கூறி, தீயன பேசுகிறான். அவன் செய்வது
இது மட்டுமல்ல. கிறிஸ்துவின் சேவையில் ஈடுபட்
டுள்ள சகோதரருக்கு உதவவும் மறுக்கிறான். சகோதர
ருக்கு உதவ விரும்பும் மக்களையும் தியோத்திரேப்பு
தடுக்கிறான். அவர்கள் சபையினின்று விலகும்படி
யாகச் செய்கிறான்.
**11**எனது அன்பான நண்பனே, தீயவற்றைப் பின்பற்
றாதே. நல்லவற்றைப் பின்பற்று. நல்லவற்றைச் செய்
கிற மனிதன் தேவனிடமிருந்து வந்தவன். தீயவை
செய்யும் மனிதனோ, தேவனை அறியாதவன்.
**12**தெமெத்திரியுவைப் பற்றி எல்லா மக்களும் நல்
லபடியாகப் பேசுகிறார்கள். அவர்கள் கூறுவதோடு
உண்மையும் ஒத்துப்போகிறது. அவனைக் குறித்து
நாங்களும் நல்லவற்றையே சொல்கிறோம். நாங்கள்
கூறுவது உண்மையென்பதும் உனக்குத் தெரியும்.
**13**உனக்கு நான் கூற வேண்டிய பல செய்திகள்
உள்ளன. ஆனால் எழுதுகோலையும் மையையும்
பயன்படுத்த விரும்பவில்லை. **14**நான் உன்னை
விரைவில் சந்திக்க விரும்புகிறேன். அப்போது நாம்
ஒருமித்துக் கூடிப் பேசலாம். **15**உனக்கு சமாதானம்
உண்டாகட்டும். என்னோடிருக்கும் நண்பர்கள்
உனக்குத் தங்கள் அன்பைத் தெரிவிக்கிறார்கள். அங்
குள்ள நம் நண்பர்கள் ஒவ்வொருவருக்கும் எங்கள்
அன்பைத் தெரியப்படுத்து.